செய்தி வெளியீடு எண் : 2198 நாள் : 02.11.2023

செய்தி வெளியீடு

இன்று (02.11.2023) நகர் ஊரமைப்பு இயக்ககம், கோயம்பேடு வளாகத்தில் மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.சு.முத்துசாமி அவர்கள் தலைமையில் மனைப்பிரிவு, கட்டடங்கள், நிலப்பயன் மாற்றம் கோப்புகளின் நிலை, ஒற்றை சாளர முறை (Single Window Portal) நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றம், மலையிட பாதுகாப்புக் குழுமம் (HACA) சம்பந்தமான வழிமுறைகள் குறித்து ஆய்வுக் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

மேலும் கட்டுமானப் பொறியாளர்கள், ரியல் எஸ்டேட் உரிமையாளர்கள் சங்க பிரதிநிதிகளிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது. திட்ட அனுமதி விண்ணப்பங்களை விரைந்து தீர்வு செய்யவும், பெறப்பட்ட கோரிக்கைகளை நடைமுறைப்படுத்தவும், ஒற்றை சாளர முறையில் (Single Window Portal) பிற துறைகளை இணைக்கும் பணியை துரிதமாக முடிக்கவும் அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசு செயலர், திரு.சி.சமயமூர்த்தி, இ.ஆ.ப. அவர்கள் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர் திரு.பா.கணேசன், இ.ஆ.ப. மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நகர் ஊரமைப்பு இயக்குநர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in